**11.08.2025 அசல் வழக்கு எண்.370/1998 Starting Time : 12.56 p.m.**

**பி.வா.சா.1 திரு.பெருமாள் த/பெ. சாரங்கபாணி**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1**. என்னுடைய வீட்டிற்கு கிழக்கு பக்கம் வாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் எந்த வருடம் நான் குடியிருக்கும் இடத்தை வாங்கினேன் என்றால் 1985-ல் வாங்கினேன். அப்போது வாதிகளின் வீடு இருந்ததா என்றால் இருந்தது. எனக்கு கிரயம் கொடுத்த நபர்கள் மாரியப்பன், அங்கு என்றால் சரிதான். நான் கிரயம் பெறும்போது காலிமனையாக தான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான்.

**2**. நான் கிரயம் பெறும்போது காலி மனையாக தான் இருந்தது என்று கூறியுள்ளபட்சத்தில், எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் மாரியப்பன், அங்கு என்பவர்களிடம் கிரயம் பெற்று அவர்களை போலவே நான் வீடு கட்டி அவர்கள் வழிக்காக பயன்படுத்திய இடத்தை நானும் அவர்களிடம் வாங்கிய இடத்தில் இருந்து அதற்கு பின்னால் எனது வீட்டு தோட்டத்திற்கு சென்று வர வழியை பயன்படுத்துகின்றேன் என்று சொன்னால் அது தவறு என்றால் சரியல்ல, நான் கிரயம் பெறும்போது அவர்கள் அனுபவித்து வந்த வீட்டின் சுவர் இடிந்து காணப்பட்டது, அதன் அருகில் வழி இருந்தது, நான் வீடு கட்டி அந்த வழியை நானும் அனுபவித்து வருகிறேன்.

**3**. எனது கிரய ஆவணத்தில் என்ன அளவு பொறுத்து கிரயம் பெற்றேனோ அதே அளவில் தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் நான் கிரயம் பெற்ற இடத்திற்கு மேற்கு பக்கம் உள்ள இடத்தையும் சேர்த்து கிரயம் பெற்று வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் பொது நாராசந்து உள்ளது என்றும், அதற்கு மேற்கு பக்கம் கோபால் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் பொது நாராசந்து உள்ளது என்றும், எனது வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள சந்து வாதிகளுக்கு பாத்யப்பட்டது என்றும், அதனால் அதில் நான் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல.

**4**. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர் ஆணையர் வந்து தாவா சொத்தை அளந்து பார்த்தார்களா என்றால் அளந்து பார்த்தார்கள். அப்போது எங்கள் இருவரின் ஆவணங்கள் படி அளந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கறிஞர் ஆணையர் அளந்து பார்த்தாரா என்றால் அளந்து காட்டினார். வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

**5**. வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கையில் 2வது பக்கத்தில் 3வது பாராவில், இருதரப்பினர்களில் வாதிகள் பத்திர அளவுகளின் படி அளந்து பார்த்ததில் வாதிகளின் இடம் 36 கெஜம் அதாவது 108 அடியில் இருந்தது என்றும், எதிர்மனுதாரர் மனுதாரரின் மனையில் 5 அடி அளவில் ( 1.6 மீட்டர்) அகலத்தில் 36 அடி அளவு (11 மீட்டர்) நீளத்தில் எதிர்மனுதாரர் மாடி வீடு கட்டி ஆக்ரமிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது தவறு.

**6**. நான் எனது கிரயப்பத்திரத்தில் உள்ள அளவுகளின்படி தான் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரிதான். **(சாட்சி தான் நீதிமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புவதாக கூறி, நாங்கள் குடியிருக்கும் ஊரில் ஒவ்வொரு வீட்டிற்கும் கிழக்கு பக்கம் தான் சந்து விட்டு வீடு கட்டியிருப்பார்கள் என்று கூறினார்).** வாதிகள் குடியிருக்கும் வீடு வாதிகள் மற்றும் அவர்களுடன் பிறந்த சகோதரர்களுக்கும் பாத்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாதிகள் குடியிருக்கும் வீட்டில் 1ஆம் வாதி மட்டும் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

**7**. வாதிகள் நாவிதர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றும், அதனால் தான் முடி திருத்த வருபவர்கள் சந்து வழியாக வந்து போவதற்காக இடம் விட்டு கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகளின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் எனக்கு ஏதேனும் உரிமை உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர் பதில் உரையில் 5வது பாராவில், இப்பிரதிவாதிக்கு வாதியின் மனைக்கு கிழக்கு பக்கம் பிதுராஜிதமாகவும் மற்றும் 5.6.1978ல் சீனுவாச

நாயுடு குமாரர் ஆதிகேசவ நாயுடு இடம் மற்றும் 16.12.1985-ல் முருக கவுண்டர் குமாரர்கள் மாரியப்பன், அங்கு என்பவர்களிடம் கிரயம் பெற்று அனுபவித்து வந்தவர் என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல, நான் எனது வழக்கறிஞரிடம் வாதிகளின் வீட்டிற்கு மேற்கு பக்கம் எனது இடம் உள்ளது என்று தான் கூறினேன்.

**8**. நான் தாக்கல் செய்துள்ள எதிர் பதில் உரையில், இப்பிரதிவாதி மாரியப்பன், அங்கு என்பவர்களிடம் கிரயம் பெறும் முன்னரே வாதிகளின் பழைய வீட்டின் அளவு கிழக்கு மேற்கு 3 அடி அளவு சந்து விட்டு அதன் பிரதிவாதியின் வீட்டின் பின்பக்கம் உள்ள அவர்களுடைய வீட்டிற்கு சென்று வரவும் மற்றும் ஆடு மாடுகளை ஓட்டி சென்றும் அனுபவித்து வந்தனர் என்பதும் உண்மை என்று கூறியிருந்தால் அது சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் பதில் உரையில் வாதிகளின் வீட்டிற்கு மேற்கு பக்கம் சந்து உள்ளது, அதை நான் அனுபவித்து வருகிறேன என்று நான் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

**9**. நான் சொல்வது பொய் என்றும், வாதிகளுக்கு பாத்யப்பட்ட சந்தில் நான் ஆக்ரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆக்ரமிப்பு செய்துள்ள வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பகுதியை நான் இடித்து வாதியிடம் சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் ஆக்ரமிப்பு ஏதும் செய்யவில்லை. என்னுடைய இடத்தில் தான் வீடு கட்டியுள்ளேன். நான் வீடு கட்டும்போது வாதிகளின் வீட்டின் மேல் உள்ள தண்ணீர் தொட்டி மற்றும் கேபிள் ஒயர் சேதப்படுத்தப்பட்டது என்றால் அது பொய்யான சங்கதியாகும்.

**10**. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையின்படி ஆவணங்கள் படி அளந்து பார்த்ததில் நான் ஆக்ரமிப்பு செய்துள்ளதாகவும், வருவாய் ஆவணங்கள் படி அளந்து பார்த்ததில் ஆக்ரமிப்பு இல்லை என்றும் உள்ளதால் நான் வருவாய் ஆவணங்களில் அதிகமாக உள்ள அளவுகளை எனக்கு சாதகமாக பயன்படுத்தி உரிமை கொண்டாடுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய இடத்தில் தான் நான் வீடு கட்டியுள்ளேன். ஆவணங்களின்படி

எனக்கு அளவீடுகள் குறைவாக உள்ளது என்றும், ஆனால் வருவாய் ஆவணங்கள்படி அளவீடுகள் அதிகமாக உள்ளது என்பது எனது எதிர் வழக்கு இல்லையா என்றால் சரியல்ல. நான் என்னுடைய ஆவணங்களின் அளவுகளில் தான் அனுபவித்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர் பதில் உரையும், பிரமாண வாக்குமூலமும் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்றும், அதனால் வாதிகள் கேட்கும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**Ending time : 01.50 p.m.**

ஓம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.